**ஏப்ரல் – 16**

# TNPSC துளிகள்

- ‘டிஜி கேரளா’ எண்ணிமக் கல்வியறிவு திட்டத்தின் உதவியுடன் முழுமையான டிஜிட்டல் கல்வியறிவை அடைந்த முதல் மாநிலமாக கேரளா மாறியுள்ளது.
- கேரளாவின் முதலமைச்சர் தர்மடம் என்ற பகுதியினை அம்மாநிலத்தின் மோசமான வறுமை இல்லாத முதல் தொகுதியாக அறிவித்துள்ளார் என்பதோடு இது 2025 ஆம் ஆண்டு நவம்பர் 01ம் தேதிக்குள் மாநிலம் முழுவதும் மோசமான வறுமை நிலையை முழுமையாக ஒழிக்க வழி வகுக்கும்.
- பிரதமர் மோடிக்கு இலங்கை அதிபரால் அந்நாட்டின் மிக உயரிய குடிமை விருதான ‘இலங்கை மித்ர விபூஷணா’ வழங்கப்பட்டுள்ளது.
- நமது உள்ளார்ந்தத் தார்மீக திசைகாட்டியின் முக்கியத்துவம், முக்கியத் தனிநபர்கள் அவர்களுடைய மதிப்புகள், செயல்கள் மற்றும் அவர் பொறுப்புகளைப் பற்றி சிந்திக்க அவற்றின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்துவதற்காக ஆண்டுதோறும் ஏப்ரல் 05 ஆம் தேதியன்று சர்வதேச மனசாட்சி தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- மேம்பாடு மற்றும் அமைதிக்கான சர்வதேச விளையாட்டு தினம் ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் தேதி அன்று "விளையாடும் களத்தை சமன் செய்தல்: சமூக உள்ளடக்கத்திற்கான விளையாட்டு" என்ற கருத்துருவின் கீழ் அனுசரிக்கப்பட்டது.
- ரோமானியக் கலாச்சாரத்தை மிகவும் நன்கு கொண்டாடவும், ரோமானியச் சமூகம் எதிர்கொள்ளும் பல்வேறு சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் வேண்டி சர்வதேச ரோமானி தினம் ஆண்டுதோறும் ஏப்ரல் 08 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வாட்ஸ்அப் மூலமான தொலைத்தொடர்பு மருத்துவ சேவை வழிகாட்டுதல்

- தமிழ்நாடு அரசின் மாரடைப்பு மேலாண்மைத் திட்டம் ஆனது, 18 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் சுமார் 188 மாவட்ட அளவில்/ தாலுக்கா அளவில் அரசு மருத்துவமனைகளை உள்ளடக்கிய ஒரே மையத்துடன் இணைந்த பல கிளைகள் கட்டமைப்பு மாதிரியில் செயல்படுகிறது.
- இந்தத் திட்டத்தின் ஒரு ஐந்து ஆண்டு அனுபவம் (2019-2023) ஆனது, பெரிய மாரடைப்புப் பாதிப்புகளை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் சிகிச்சையளிப்பதற்கான தொலை தூர மருத்துவச் சேவை வழிகாட்டுதலை வழங்குவதற்காக என பெரிய மற்றும் சிறிய மருத்துவமனைகளின் வலையமைப்பு சேவையினை மையக் கட்டமைப்பு மாதிரியில் வழங்குவதற்கு வாட்ஸ்அப் குழுக்கள் ஒரு செலவு குறைந்தச் செயல்முறை என்பதை நிரூபித்துள்ளது.
- இதன் மூலம், பெரிய மைய மருத்துவமனைகளில் உள்ள இருதய நோய் நிபுணர்கள் சிறிய பிரிவுகளுக்கு தொலைதூர மருத்துவச் சேவை வழிகாட்டுதலை வழங்கினர், என்பதோடு கூடுதலாக, அம்மருத்துவமனைகளுக்கு இடையில் நோயாளிகளின் பரிமாற்றங்களை ஒருங்கிணைக்கவும் அதன் முழுமையானச் செயல்முறையையும் கண்காணிக்கவும் இந்தக் குழுக்கள் பயன்படுத்தப்பட்டன.
- மாரடைப்பு இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் நபர்களின் மேலாண்மையை மிக நன்கு எளிதாக்குவதற்காக ஒவ்வொரு கிளைக்கும் ஒன்று என 18 வாட்ஸ்அப் குழுக்கள் உருவாக்கப் பட்டன.

- இந்தக் குழுக்கள் ஆனது, அங்குள்ள மைய மருத்துவமனைகளில் உள்ள இருதயநோய் நிபுணர்களுக்கும் துணை மருத்துவமனைகளில் உள்ள குழுக்களுக்கும் இடையே ஒரு தடையற்ற தகவல்தொடர்பைச் செயல்படுத்துகின்றன.
- மொத்தத்தில், STEMI (ST-இரத்தக் குழாய் அடைப்பு இறுக்க நிலை மாரடைப்பு) உள்ள 71,907 நபர்கள் ஐந்து ஆண்டுகளில் சிகிச்சை பெற்றனர்.
- STEMI பாதிப்பிற்குச் சிகிச்சையளிக்கப்பட்ட மொத்த நபர்களின் எண்ணிக்கையில் 67% ஆண்டு அதிகரிப்பு என்பது பதிவானது.

**Overview of individuals treated in Tamil Nadu government heart attack management programme hubs**

| Year | Total number of STEMI patients | Primary PCI | Fibrinolysis | Pharma co-invasive PCI | Death | Guideline-based revascularisation |
|---|---|---|---|---|---|---|
| 2019 | 11,363 | 563 | 7,342 | 898 | 994 | 7,905 |
| 2020 | 11,242 | 154 | 7,941 | 279 | 1,030 | 8,095 |
| 2021 | 13,287 | 118 | 9,972 | 1,154 | 1,175 | 10,090 |
| 2022 | 17,030 | 990 | 11,993 | 3,201 | 1,432 | 12,983 |
| 2023 | 18,985 | 1,588 | 12,804 | 4,058 | 1,573 | 14,392 |

**How does the hub-and-spoke model work?**

1 Spoke hospitals are equipped to perform ECGs for patients with chest pain, diagnose or rule out STEMI with remote support from hub hospitals, and initiate fibrinolytic therapy when indicated


2 Spoke medical officers share patient's details and ECGs on WhatsApp groups to seek diagnostic and management guidance

3 Hub hospital cardiologists provide real-time advice on diagnosing STEMI and selecting most appropriate guideline-directed treatment for STEMI

4 Duty cardiologists at the hub hospital are available via dedicated mobile numbers for additional clarifications

5 Patients are transferred to the hub hospitals for angiography, and if necessary, angioplasty-pharmaco-invasive treatment pathway

## சதுப்பு நில முதலைகளின் எண்ணிக்கை




- தமிழ்நாடு மாநில வனத்துறையானது, காடுகளில் உள்ள சதுப்பு நில முதலைகளின் எண்ணிக்கையை மதிப்பிடுவதற்கும் மனித-முதலை மோதலைக் குறைப்பதற்குமான ஆய்வுகளை நடத்தி வருகிறது.
- தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க அளவில் மக்கர் அல்லது சதுப்பு நில முதலைகள் (குரோக்கோடைலஸ் பளுஸ்டிரிஸ்) உள்ளன என்பதோடு இவை இந்தியாவில், மிகவும் குறிப்பாக கொள்ளிடம் நதிக்கரையில் பரவலாகக் காணப்படும் முதலை இனங்கள் ஆகும்.
- தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அணைக்கரையில் மட்டும் 50க்கும் மேற்பட்ட இனங்கள்

பதிவு செய்யப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அதன் இனப்பெருக்க மையங்களில் பல குறிப்பிடத் தக்க மக்கர் முதலைகள் காணப்படுகின்றன.
- திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் மையத்தில் 299 முதலைகளும், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் 93 முதலைகளும், திருப்பூர் மாவட்டம் அமராவதியில் 82 முதலைகளும் உள்ளன.
- அணைக்கரையில் முதலை வளங்காப்பு மையத்தை நிறுவ தமிழக அரசு 2.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.

## தமிழக அரசின் மலேரியா ஒழிப்பு உத்திகள்

- தமிழ்நாட்டில், கடந்த இரண்டு ஆண்டுகளாக, சுமார் 340 என்ற மலேரியாப் பாதிப்புகள் மட்டுமே பதிவாகியுள்ளன.
- தமிழ்நாடு மாநிலத்தில் பொதுவாக வைவாக்ஸ் மற்றும் ஃபால்சிபாரம் எனும் இரண்டு வகையான மலேரியப் பாதிப்புகளே பதிவாகியுள்ளன.
- 2001 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பதிவான மலேரியாப் பாதிப்புகள் 2.09 மில்லியனிலிருந்து 0.19 மில்லியனாகக் குறைந்துள்ளன.
- அதே காலக் கட்டத்தில் பதிவான மிக ஆபத்தானதாக கருதப்படுகிற பிளாஸ்மோடியம் ஃபால்சிபாரம் பாதிப்புகள் 1.0 மில்லியனிலிருந்து 0.12 மில்லியன் என்ற அளவிலானப் பாதிப்புகளாகக் குறைந்துள்ளன.
- SPR (ஆய்வகத்தில் உறுதி செய்யப்பட்ட மலேரியா பாதிப்பு விகிதம்) 2.31 மில்லியனில் இருந்து 0.19 ஆகக் குறைந்துள்ளது.
- SFR (ஃபால்சிபாரம் பாக்டீரியா பாதிப்பு விகிதம்) 2001 ஆம் ஆண்டில் 1.11 மில்லியனில் இருந்து 2020 ஆம் ஆண்டில் 0.12 மில்லியனாகக் குறைந்துள்ளது.
- சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா, மிசோரம், ஒடிசா, உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் தொடர்ந்து மிக அதிக எண்ணிக்கையிலான பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

| Malaria in India | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|
| All cases | 161753 | 176522 | 227564 | 257154 |
| Plasmodium falciparum | 101566 | 101070 | 137945 | 155026 |
| Deaths | 90 | 83 | 83 | 76 |


# தேசியச் செய்திகள்

## ஹரித் யோகா முன்னெடுப்பு


- ஆயுஷ் அமைச்சகம் ஆனது, 2025 ஆம் ஆண்டு சர்வதேச யோகா தினத்தின் (IDY) 10 மிக முக்கிய நிகழ்வுகளின் ஒரு பகுதியாக டெல்லியில் ஹரித் யோகா என்ற திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- தனிப்பட்ட நல்வாழ்வு மற்றும் புவியின் வளம் ஆகிய இரண்டையும் கவனித்துக்

கொள்வதன் அடையாளமாக மரங்களை நடுவதற்கு மக்களை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தப் பசுமை முன்னெடுப்பினை ஊக்குவிக்க யோகா ஆர்வலர்களுக்கு 5,000க்கும் மேற்பட்ட மருத்துவக் குணம் கொண்ட தாவரங்கள் வழங்கப்பட்டன.
- இந்தத் திட்டமானது சுற்றுச்சூழல் விழிப்புணர்வுடன் இந்த யோகா பயிற்சியை மிகவும் நன்கு இணைக்கிறது.




## 2025 ஆம் ஆண்டில் 25 GW புதுப்பிக்கத்தக்க எரிசக்தி




- சூரியசக்தி, காற்றாற்றல் மற்றும் நீர் மின் ஆற்றல் போன்ற நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியானது, 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் 25 ஜிகாவாட் என்ற சாதனையை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 ஆம் தேதி நிலவரப்படி, நாட்டில் மொத்தம் 222.86 ஜிகா

வாட் புதைபடிவம் சாரா ஆற்றல் உற்பத்தி அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

- இது 2023-24 ஆம் ஆண்டில் பதிவான 18.56 ஜிகாவாட் என்ற முந்தைய அதிகரிப்பை விஞ்சி, ஒரே ஆண்டில் பதிவான மிக அதிகபட்ச அதிகரிப்பைக் குறிக்கிறது.
- சூரிய சக்தி உற்பத்தித் திறன் ஆனது சுமார் 38% அதிகரித்து 100 GW திறனை விஞ்சியது.

# சர்வதேசச் செய்திகள்

## புல்லட் கர்டைன் - சீனா

- உலகின் முதல் ஒருங்கிணைந்த ஆளில்லா விமான எதிர்ப்பு ஆயுத அமைப்பை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது பல ஆளில்லா விமானங்கள் மற்றும் அதிவேக எறிகணைகளுக்கு எதிராக கடும் தாக்குதல்களை மேற்கொள்ளும்.
- புல்லட் கர்டைன் என்றும் அழைக்கப்படுகின்ற இந்த அமைப்பானது மிகவும் ஒரு தனித்துவமான துல்லிய இட (plane-to-point) இடைமறிப்பு முறையைக் கொண்டுள்ளது.
- இது உள்வரும் இலக்குகளை மறிக்க ஒன்றுடன் ஒன்று இடையிடும் தாக்குதல் சக்தி கொண்ட ஓர் எறிகணைகளின் தொகுப்பு தடுப்புச் சுவரை உருவாக்கும்.





## உலகின் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடி

- சுமார் இரண்டு ஆண்டு கால அளவிலான போரானது, சூடானை உலகின் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடியில் மூழ்கடித்துள்ளது.
- இது அந்த ஆப்பிரிக்க நாட்டைப் பஞ்சத்தை எதிர்கொள்ளும் ஒரு நாடாக மாற்றி உள்ளது.
- சுமார் 25 மில்லியன் மக்கள் அதாவது, சூடானின் மக்கள்தொகையில் பாதி பேர் மிக கடுமையான பட்டினி நிலையை எதிர்கொள்கின்றனர்.
- சூடான நாட்டின் இராணுவம் மற்றும் துணை இராணுவ அமைப்பின் தலைவர்களுக்கு இடையே மிக நீண்ட காலமாக நீடித்து வந்த பதட்ட நிலை மூண்டெழுந்ததையடுத்து,


சூடான் நாடானது, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று மோதலில் மூழ்கியது.

- அப்போதிலிருந்து, குறைந்தது 20,000 பேர் கொல்லப் பட்டதாகக் கூறப்படுகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்


## தாவர இலைகளில் நுண் நெகிழிகள்




- தாவர இலைகள் காற்றில் இருந்து நேரடியாக சிறு நெகிழித் துண்டுகள் (Microplastics) மற்றும் நுண் நெகிழிகளை உறிஞ்சுகின்றன.
- இந்தத் துகள்கள் ஆனது, பின்னர் மனிதர்களால் உட்கொள்ளப்படும் தாவர வகைகள் மற்றும் பயிர்கள் மூலம் உணவுச் சங்கிலியில் நுழைகின்றன.
- சிறு நெகிழிகள் என்பது சுமார் 5 மில்லிமீட்டர் விட்டம் கொண்ட நெகிழித் துகள்கள் என வரையறுக்கப்படுகிறது அதே நேரத்தில் நுண்நெகிழிகள் (Nano plastics) ஆனது 1,000 நானோ மீட்டருக்கும் குறைவான அளவிற்கு சிறியவையாகும்.
- இலைத் துளைகள் என்பது சிறப்புச் செல்களால் உருவாக்கப்பட்ட சிறிய துளைகள் ஆகும்.

- ❖ புறத்தோல் என்பது மெழுகால் பூசப்பட்ட ஒரு பாதுகாப்புச் சவ்வு ஆகும் என்பதோடு, இது நுண் நெகிழிகளை உறிஞ்சுவதற்கு குறிப்பாக உகந்ததாக அமைகிறது.

## டைஃப்ளோபெரிபாட்டஸ் வில்லியம்சோனி




- ❖ ஆராய்ச்சியாளர்கள், மிக நீண்ட காலமாக காணாமல் போன வெல்வெட் புழுக்களின் (ஃபைலம் ஓனிகோஃபோரா) இனத்தினைச் சுமார் 111 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கண்டுபிடித்துள்ளனர்.
- ❖ இது உலகின் பழமையான உயிர் வாழும் புதைபடிவங்களில் ஒன்றாகும்.
- ❖ டைஃப்ளோபெரிபேட்டஸ் வில்லியம்சோனி என்று பெயரிடப்பட்ட இந்தப் பண்டைய கால இனம் ஆனது சுமார் 220 மில்லியன் ஆண்டுகள் பழமையானது என மதிப்பிடப் பட்டுள்ளது.
- ❖ ஓனிகோஃபோரா என்பது மிகவும் பழமையான ஒரு குழுவாகும் என்பதோடு இது 350 மில்லியன் ஆண்டுகளுக்கு மேல் பழமையானது.
- ❖ இந்த இனத்தில் தற்போது இரண்டு குடும்பங்கள் மட்டுமே உள்ளன என்பதோடு இவை இரண்டிலும் 200க்கும் மிகாத எண்ணிக்கையிலான இனங்களே உள்ளன.
- ❖ டி. வில்லியம்சோனியின் மூலக்கூறுத் தரவு ஆனது, தெற்காசிய ஓனிகோஃபோராக்கள் அவற்றின் நியோட்ரோபிகல் (மெக்ஸிகோ மற்றும் கரீபியனின் தெற்குப் பகுதிகள் உட்பட மத்திய மற்றும் தென் அமெரிக்கா) பகுதியிலிருந்து பிரிந்ததைக் குறிக்கிறது.
- ❖ இது சுமார் 237 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்க இனத்தின் ஒரே சார்பு நிலை இனமாகும்.
- ❖ ஆசிய ஓனிகோஃபோராவுக்கு என்று ஆஸ்திரேலிய ஓனிகோஃபோராக்களில் எந்தச் சார்பு நிலை இனங்களும் இல்லை என்று கண்டறியப்பட்டது.

## காட்டுத் தீ - ஃபாங்புய் தேசியப் பூங்கா

- ❖ மிசோரமின் ஃபாங்புய் தேசியப் பூங்காவின் பல பகுதிகளில் மூண்ட காட்டுத் தீயானது

அப்பூங்காவின் மொத்தப் பரப்பளவில் சுமார் ஒன்பதில் ஒரு பங்கைப் பாதித்தது.

- ஃபாங்புய் தேசியப் பூங்கா மற்றும் அதை ஒட்டிய மியான்மர் காடுகள் மிக அருகி வரும் மவுண்ட் விக்டோரியா பாபாக்ஸ் பறவையின் ஒரே வாழ்விடமாகும்.
- இது இந்தியத் துணைக் கண்டத்தில் காணப்படும் தரைப் பகுதி வாழ் பறவை இனம் ஆகும்.
- ஜூம் சாகுபடியால் /மாற்றிடச் சாகுபடியால் ஏற்படும் காட்டுத் தீயானது மிசோரமில் தொடர்ச்சியாக எழுந்து வரும் ஒரு பிரச்சினையாகும்.




## புதிய ஊசித் தட்டான் இனம் – வயநாடு




- மேற்குத் தொடர்ச்சி மலையின் வயநாடு நிலப்பரப்பில் ஒரு புதிய வகையான ஊசித் தட்டான் கண்டறியப்பட்டுள்ளது.
- முதன்முதலில் இந்த தட்டான் பூச்சி கண்டுபிடிக்கப்பட்ட இடத்தைக் கொண்டு இதற்கு யூபியா வயநாடென்சிஸ் என பெயரிடப்பட்டது.

- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஊசித் தட்டான் இனமானது, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் ஓடோநாட்டாவின் (தட்டான் பூச்சி மற்றும் ஊசித் தட்டானை உள்ளடக்கிய குழு) 223வது இனம் மற்றும் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட 191வது இனமாகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் அறிக்கை 2025




- 2025 ஆம் ஆண்டிற்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் அறிக்கையானது ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாடு அமைப்பினால் (UNCTAD) வெளியிடப் பட்டுள்ளது.
- எல்லைப்புறத் தொழில்நுட்பங்களுக்கான தயார்நிலை குறியீட்டில், 2022 ஆம் ஆண்டில் 48வது இடத்தில் இருந்த இந்தியா 2024 ஆம் ஆண்டில் 36வது இடத்தைப் பிடித்து அதன் நிலையை மேம்படுத்தியுள்ளது.
- எல்லைப்புறத் தொழில்நுட்பங்களின் மீதான ஒரு நாட்டின் தயார்நிலையை அளவிடும் உலகளாவியக் குறியீட்டில் இடம் பெற்ற 170 நாடுகளில் இந்தியா 36வது இடத்தில் உள்ளது.
- இந்தியா தகவல் மற்றும் தொலைத்தொடர்பு (ICT) பிரிவில் 99வது இடத்திலும், திறன்கள் பிரிவில் 113வது இடத்திலும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் மூன்றாவது இடத்திலும், தொழில்துறைத் திறனில் பத்தாவது இடத்திலும், நிதித்துறையில் 70வது இடத்திலும் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், சுமார் 67 பில்லியன் டாலர்கள் அல்லது உலகளாவியச் செயற்கை நுண்ணறிவில் (AI) தனியார் முதலீட்டில் சுமார் 70% என்ற முதலீட்டுடன், செயற்கை நுண்ணறிவு நுட்பத்தில் தனியார் துறை முதலீட்டின் அடிப்படையில் அமெரிக்க நாடு உலகில் முன்னணியில் உள்ளது.
- வளர்ந்து வரும் நாடுகளின் பட்டியலில் அதிக முதலீடுகளைக் கொண்ட ஒரே நாடாக சீனா 7.8 பில்லியன் டாலர்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ள நிலையில் இந்தியா 1.4 பில்லியன் டாலர்களுடன் பத்தாவது இடத்தில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் செயற்கை நுண்ணறிவில் (AI) பெரும் குறிப்பிடத்தக்கத் தனியார்

முதலீடுகளைக் கொண்ட உலகின் வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியாவும் சீனாவும் மட்டுமே இடம் பெற்றுள்ளன.


❖ அமெரிக்காவானது அதிக அளவு கிட்ஹப் (GitHub) தளத்தில் மென்பொருள் உருவாக்கும் நிபுணர்களைக் கொண்டுள்ள நிலையில் அதைத் தொடர்ந்து இந்தியாவும் சீனாவும் இடம் பெற்று உள்ளன.

❖ இந்தியாவில் சுமார் 13 மில்லியன் மற்றும் பிரேசிலில் நான்கு மில்லியன் திறன் மிக்க நபர்களுடன் அதிக நிபுணத்துவம் கொண்டவையாக உள்ளன.

❖ காற்றாலை மீதான ஆற்றலில் ஜெர்மனியும், நானோ தொழில்நுட்பத்தில் இந்தியாவும், மின்சார வாகனங்கள் நுட்பங்களில் ஜப்பானும் 5ஜி மீதான தொழில்நுட்பத்தில் தென் கொரியக் குடியரசும் அதிக நிபுணத்துவம் பெற்றுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## கர்நாடக அரசின் சாதிவாரி கணக்கெடுப்பு நிலை 2025




❖ கர்நாடக மாநில அரசானது, இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான (OBCs) இட ஒதுக்கீட்டைத் தற்போதுள்ள 32 சதவீதத்திலிருந்து 51% ஆக அதிகரிக்க முன் மொழிந்து உள்ளது.

❖ இதன் விளைவாக மாநிலத்தில் மொத்த இட ஒதுக்கீடு ஆனது 85% ஆக உயரும் என்ற நிலையில் இதில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு (EWS) 10 சதவீதமும் பட்டியலிடப்பட்டச் சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் ஆகிய இரு பிரிவினருக்கு 24 சதவீதமும் அடங்கும்.

❖ இந்தக் கணக்கெடுப்பு ஆனது, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மக்கள் தொகையானது மாநில மக்கள் தொகையில் சுமார் 70% ஆகும் என்று கூறுகிறது.

## கலப்பின நெல் விதைகளுக்குத் தடை

❖ பஞ்சாப் மாநில அரசானது, கலப்பின நெல் விதைகள் (பாஸ்மதி வகை சாராத அரிசி வகை) மாநிலத்தில் அதிக விலைக்கு விற்கப்படுவதாகக் கூறி அதன் விற்பனையைத் தடை செய்துள்ளது.


❖ இந்திய உணவுக் கழகம் (FCI) நிர்ணயித்தத் தரங்களுடன் ஒப்பிடும்போது, இந்த நெல் மணிகளை ஆலையில் அரைக்கும் போது மிக அதிக சதவீத அளவில் நொய் அரிசிகள் உருவாகின்றன.

- பஞ்சாபில் சாகுபடிக்காக அதிகாரப்பூர்வமாகப் பரிந்துரைக்கப்பட்ட எட்டுக் கலப்பின நெல் வகைகள் உள்ளன.
- சவன்னா, VNR, கோர்டேவா மற்றும் பேயர் போன்ற சில தனியார் விதை நிறுவனங்கள் மாநிலத்தில் இந்த அங்கீகரிக்கப்பட்ட கலப்பினங்களை விநியோகிக்கின்றன.
- பொதுவாக வளர்க்கப்படும் சில வகைகளில் சவா 127, சவா 134, சவா 7501, 27P22, VNR 203 மற்றும் இதர வகைகள் அடங்கும்.




## முக்கிய தினங்கள்

### 62வது தேசிய கடல்சார் தினம் - ஏப்ரல் 05




- இந்தத் தினமானது, 1919 ஆம் ஆண்டில் SS லாயல்டி கப்பலின் வரலாற்றுப் பயணத்தை நினைவு கூருகிறது.
- இது சிந்தியா நீராவிக் கப்பல் நிறுவனத்தினால் இயக்கப்பட்டது.
- மும்பையிலிருந்து இலண்டனுக்குச் சென்ற முதல் இந்தியக் கப்பல் இதுவாகும்.
- இந்த நாள் ஆனது 1964 ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.


- மார்ச் 30 முதல் ஏப்ரல் 05 ஆம் தேதி வரை வணிகக் கடற்படை வாரமும் அனுசரிக்கப் படுகிறது.

## பார்வைத் திறன் இழப்புத் தடுப்பு வாரம் 2025




- இந்தியா ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 01 முதல் ஏப்ரல் 07 ஆம் தேதி வரையில் பார்வைத் திறன் இழப்புத் தடுப்பு வாரத்தை அனுசரிக்கிறது.
- இந்த முன்னெடுப்பு ஆனது பார்வைத் திறன் இழப்புத் தடுப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, வழக்கமான கண் பரிசோதனைகளை ஊக்குவிப்பது மற்றும் மிகவும் ஆரோக்கியமான பழக்கங்களை மேம்படுத்துவது போன்றவற்றை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பார்வைத் திறன் இழப்புத் தடுப்புக்கான தேசியச் சங்கம் ஆனது, ஜவஹர்லால் நேரு மற்றும் ராஜ் குமாரி அம்ரித் கௌர் ஆகியோரால் 1960 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- பார்வைத் திறன் இழப்பு மற்றும் பார்வைக் குறைபாட்டால் இந்திய நாடு மட்டும் ஒரு ஆண்டுக்கு 54.4 பில்லியன் டாலர்களை இழக்கிறது.


## உலக சுகாதார தினம் - ஏப்ரல் 07




- இது நோய்கள் மற்றும் கவனம், நோய்த் தடுப்பு கவனிப்பின் முக்கியத்துவம் மற்றும் நல் ஆரோக்கியத்தினை மிக முதன்மைத்துவம் வாய்ந்ததாக மேம்படுத்துவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த நாள் 1948 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்ற முதல் உலக சுகாதார சபையில் இருந்து உருவானது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Healthy Beginnings, Hopeful Futures" என்பது ஆகும்.

## 1994 ஆம் ஆண்டு ருவாண்டாவில் நடைபெற்ற டுட்சிகளுக்கு எதிரான இனப் படுகொலையின் சர்வதேசப் பிரதிபலிப்பு தினம் 2025 - ஏப்ரல் 07




- இது ருவாண்டாவில் டுட்சிகளுக்கு எதிரான 1994 ஆம் ஆண்டு இனப்படுகொலையின் சர்வதேச பிரதிபலிப்பு தினத்தை நினைவு கூருகிறது.
- ருவாண்டாவில் டுட்சிகளுக்கு எதிரான இனப்படுகொலையானது, 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 ஆம் தேதியன்று, அங்குள்ள ஹூட்டு பெரும்பான்மை அரசாங்கத்தின் சில உறுப்பினர்களால் தொடங்கப்பட்டது.
- ருவாண்டாவில் டுட்ஸி மற்றும் ஹுட்டு ஆகிய இரண்டு மிகப்பெரிய இனச் சமூகங்கள் ஆகும்.
- 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 முதல் ஜூலை மாதம் வரையிலான சுமார் 100 நாள் காலப் பகுதியில் 800,000க்கும் மேற்பட்ட ருவாண்டன்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப் பட்டு உள்ளது.


## மத்திய சேமக் காவல் படை (CRPF) வீர தினம் - ஏப்ரல் 09

- இந்தத் தினமானது, 1965 ஆம் ஆண்டு குஜராத்தின் ரான் ஆஃப் கட்ச் என்ற இடத்தில் பாகிஸ்தான் இராணுவத்தின் முழுப் படையணிக்கு எதிரான போரின் போது, நான்கு CRPF படைகள் வெளிப்படுத்திய இணையற்ற தைரியத்தையும், வீரத்தையும் நினைவு கூருகிறது.
- மத்திய சேமக் காவல் படையானது 1939 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, பின்பு ஜூலை 27 ஆம் தேதியன்று அரசப் பிரதிநிதிகளின் காவல்துறையாக நிறுவப்பட்டது.
- பின்னர், 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதியன்று CRPF சட்டம் இயற்றப்பட்டதன்

மூலம் அப்படை CRPF ஆக மாறியது.




## உலக ஹோமியோபதி தினம் - ஏப்ரல் 10




- இந்தத் தினமானது ஹோமியோபதியை நிறுவிய ஜெர்மன் நாட்டு மருத்துவர் டாக்டர் கிறிஸ்டியன் ஃபிரெட்ரிக் சாமுவேல் ஹானிமனின் பிறந்த நாளை நினைவு கூருகிறது.
- ஹோமியோபதி என்பது "like cures like" என்ற கொள்கையின் அடிப்படையில் உருவான ஒரு மாற்று மருத்துவ நடைமுறையாகும்.
- ஹோமியோபதியின் சில தத்துவ அடிப்படைகளை நவீன மருத்துவத்தின் தந்தையான ஹிப்போகிரட்டஸ் உருவாக்கினார்.
- இந்தியாவில் சுமார் 3.45 லட்சம் பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி மருத்துவர்கள், 277 ஹோமியோபதி மருத்துவமனைகள், 8,593 ஹோமியோபதி மருந்தகங்கள் மற்றும் 277 ஹோமியோபதி கல்வி நிறுவனங்கள் உள்ளன.

## பாதுகாப்பான தாய்மார்களுக்கான தேசிய தினம் - ஏப்ரல் 11


- இத்தினமானது 2003 ஆம் ஆண்டு ஒயிட் ரிப்பன் அலையன்ஸ் இந்தியா (WRAI) அமைப்பு மூலம் நிறுவப்பட்டது.

- பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த கஸ்தூரிபா காந்தியின் (M.K. காந்தியின் மனைவி) பிறந்த நாளைக் குறிக்கிறது.
- கர்ப்பத்திற்கு முன், கர்ப்பத்தின் போது மற்றும் கர்ப்பத்திற்குப் பின் என மகப்பேறு கால ஆரோக்கியம் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது ஒரு முதன்மை நோக்கமாகக் கொண்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Healthy Beginnings, Hopeful Futures" என்பது ஆகும்.




## உலக நடக்குவாத நோய் தினம் - ஏப்ரல் 11

- நடக்குவாத நோய் என்பது ஒரு நபரின் உடலியக்கம் மற்றும் கடும் கட்டுப்பாடுகளைப் என்பதைப் பாதிக்கும் வகையிலான ஒரு நீண்ட பாதிப்பு நிலையாகும்.
- நடக்குவாத நோய் ஆனது, பெரும்பாலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களை அடிக்கடித் தாக்குகிறது, எனினும் இது முதியோர்களை மட்டுமே தாக்கும் நோய் அல்ல.
- இது உலகளவில் மிக அதிகமாகப் பதிவாகியுள்ள இரண்டாவது பொதுவான நரம்பியக் கடத்தல் குறைபாட்டு நோயாகும்.
- இந்தத் தினம் ஆனது, நடக்குவாதத்தினை ஒரு மருத்துவப் பாதிப்பு நிலையாக முதலில் கண்டறிந்த மருத்துவர் ஜேம்ஸ் பார்கின்சனின் பிறந்த நாளைக் குறிக்கிறது.





## அம்பேத்கர் ஜெயந்தி - ஏப்ரல் 14

- இந்தத் தினமானது, 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் தேதியன்று பிறந்த பீம்ராவ் ராம்ஜி


அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.

- அவர் இந்திய அரசியலமைப்பின் முதன்மைச் சிற்பி மற்றும் சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர், சட்ட நிபுணர், பொருளாதார நிபுணர் மற்றும் பெரும் சமூகச் சீர்திருத்தவாதி ஆவார்.
- இந்தத் தினமானது முதல் முறையாக 1928 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் தேதியன்று புனேவில் ஜனார்தன் சதாசிவ் ரணபிசாய் அவர்களால் அனுசரிக்கப்பட்டது.
- அவரதுப் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக, டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு 1990 ஆம் ஆண்டில் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.




# இதரச் செய்திகள்

## CSIR-SERC நிறுவனத்தின் இரண்டு தொழில்நுட்பங்கள்




- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிச் சபையின் (CSIR) SERC ஆனது இரண்டு

தொழில்நுட்பங்களை உருவாக்கியுள்ளது.

- அவற்றில் ஒன்று சுற்றுச்சூழலுக்கு உகந்தது.
- இது சாம்பல் மற்றும் கால்சியம் கார்பைடு கசடுகள் உள்ளிட்ட சில தொழில்துறைக் கழிவுகளைப் பயன்படுத்துகிறது என்பதோடு ஒரு கட்டிடத்தினை நில அதிர்விலிருந்து தாங்கும் திறன் கொண்டதாக மாற்றும் மிகவும் ஒரு புதுமையான வடிவியல் வடிவத் தொகுதிகளைக் கொண்டுள்ளது.
- இதன் மற்றொரு தொழில்நுட்பத்தில், ஃபெரோ-சிமெண்ட் அடுக்குகளுக்கு இடையில் தெர்மோகோலைப் பயன்படுத்தி வெப்பத் திறன் கொண்டத் தொகுதிகள் தயாரிக்கப் படுகின்றன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★